**18.08.2022**

**OS.No. 295/2021 PW : 1, திருமதி. வள்ளியம்மாள்**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்று கேட்டால் அது ஆங்கிலத்தில் இருக்கிறது. எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் ஏ1 என்று குறிப்பிடப்பட்டுள்ள கையொப்பம் என் கையொப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் எஸ்2 முதல் எஸ்5 வரை உள்ள கையொப்பம் மட்டும் என் கையொப்பம். எஸ்1, எஸ்6 முதல் எஸ்14 வரை உள்ள கையொப்பங்கள் என் கையொப்பங்கள் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் ஏ2 என்று குறிப்பிடப்பட்டுள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் ஏ3 என்று குறிப்பிடப்படும் கையொப்பம் என் கையொப்பம் இல்லை. ஏ3 கையெழுத்துக்கு கீழே உள்ள செவ்வக முத்திரையில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் ஏ4 மற்றும் அதற்கு அருகில் உள்ள செவ்வக வடிவில் உள்ள முத்திரையில் உள்ள கையொப்பங்கள் என் கையொப்பங்கள் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் ஏ5 மற்றும் அதற்கு அருகில் உள்ள செவ்வக வடிவில் உள்ள முத்திரையில் உள்ள கையொப்பங்கள் என் கையொப்பங்கள் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் ஏ6 மற்றும் அதற்கு அருகில் உள்ள செவ்வக வடிவில் உள்ள முத்திரையில் உள்ள கையொப்பங்கள் என் கையொப்பங்கள் இல்லை. என்னிடம்

காட்டப்படும் வா.சா.ஆ.2ல் கம்பாரிசன் சார்ட் பார் வள்ளி என்ற பெரிய தாளில் உள்ள கையொப்பங்களில் எது என்னுடைய கையொப்பங்கள் என்று கேட்டால் கியூ2, கியூ4 மற்றும் கியூ6-ல் உள்ள கையொப்பங்கள் மட்டுமே என் கையொப்பங்கள் ஆகும். அதில் உள்ள மற்ற கையொப்பங்கள் என் கையொப்பங்கள் இல்லை. வா.சா.ஆ.2 சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றும் அது முறையாக ஒப்பீடு செய்யவில்லை என்றும் நான் வா.சா.ஆ.2 அக்கியை பற்றி சாட்சியம் அளிக்க தகுதியான நபர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே வா.சா.ஆ.2 ஏற்புடைய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அறிவிப்பை நான் அனுப்பவில்லை. வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பு ஒளி நகல் என்பதால் அதற்கு சாட்சி அந்தஸ்து எதுவும் அளிக்கமுடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 அறிவிப்பை அனுப்பியவரின் கையொப்பம் இல்லை என்றும் அதை அனுப்பியதற்கான ரசீதும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பு ஒளி நகல் என்பதால் அதற்கு சாட்சி அந்தஸ்து எதுவும் அளிக்கமுடியாது என்றால் சரியல்ல. நான் 13.12.2020ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி ஒரு அறிவிப்பை அனுப்பினார் என்றும் என்னுடைய வழக்கறிஞர் இந்தியாவில் இல்லாததால் 22.01.2021ல் அது 1ம் பிரதிவாதி வழக்கறிஞருக்கு வந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பியூட்டி கார்டர்ன்ஸ் மற்றும் ரிசார்ட்ஸ் மற்றும் நரசாரெட்டி

ஆகியோர்களுக்கு அதிகார ஆவணம் மற்றும் கிரைய ஆவணங்களை எழுதி கொடுத்ததாக நான் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுவிட்டு அந்த கிரைய ஆவணங்களை பற்றி எந்த பரிகாரமும் கேட்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கதக்கதில்லை என்றால் அந்த கிரைய ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி ஆவண அட்டவனை சொத்தை கிரையம் வாங்கிய நபரிடம் ஒப்படைத்துவிட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியிருக்கிறேன் என்றும் ஆனால் அந்த சொத்தும் என் அனுபவத்தில் இருப்பதாக பிராதில் பொய்யாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 08.04.2019 தேதியிட்ட அறிவிப்பிலும், 06.05.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பிலும், 05.11.2019 தேதியிட்ட ரிஜாய்ன்டர் அறிவிப்பிலும், 12.11.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பிலும் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று கேட்டால் நான் அறிவிப்பு எதையும் அனுப்பவில்லை. 02.08.1996ல் தாவா சொத்தில் 1/3 பாகம் கேட்டு 1ம் பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு 1ம் பரிதிவாதி 26.08.1996ல் ஒரு பதில் அறிவிப்பை எனக்கு அனுப்பினார் என்றால் சரியல்ல. 19.07.1997ல் நான் ஒரு ரிஜாய்ன்டர் அறிவிப்பை என் வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அ.வ.எண். 497/1996 என்ற ஒரு வழக்கை என்மீது தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. பூங்காவனம்மாளுக்கு தெரியாமலேயே நான் 1ம் பிரதிவாதிக்கு நானும், பூங்காவனம்மாளும் அனுப்பியதுபோல ஒரு

அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரியல்ல. 13.02.2003 அன்று சர்வே எண் 153/25, 153/27 ஆகியவற்றில் உள்ள சொத்துக்களை என் மகளின் திருமணத்திற்காக நான் விற்றுவிட்டேன். அந்த சொத்தை என் தந்தை எனக்கு கொடுக்கவில்லை. அது நான் கிரையம் வாங்கிய சொத்தாகும். அது என் தந்தையால் எனக்கு கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 25.07.2007 அன்று சர்வே எண் 82/10, 83/12 உள்ள சொத்தை ஆக 38 சென்ட்-ஐ சாந்தி என்பவருக்கு நான் கிரையம் கொடுத்தேன். என் பாகத்திற்கு மேற்கூறிய சொத்துக்களை என் தந்தை எனக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் மாமனார் மாதவ ரெட்டியார் இறந்துவிட்டார். எத்தனை வருடம் முன்பு இறந்துவிட்டார் என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 153/25, 153/27, 83/12ல் உள்ள முதுகூரில் உள்ள சொத்துக்கள் என் சொத்துக்கள் என்று சொன்னால் அது என் சொத்துக்கள் இல்லை. மேற்கூறியசொத்துக்கள் என் தந்தையாலும், 1ம் பிரதிவாதியின் தந்தையாலும் என் பாகத்திற்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. மப்பேடு கிராமத்தில் பட்டா எண் 683ல், சர்வே எண் 614/2, 625/2ல் உள்ள சொத்தை என் தந்தையும், 1ம் பிரதிவாதியின் தந்தையும் என் பாகத்திற்கு கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் சொத்துக்கள் எதுவும் ஒதுக்கப்படவில்லை என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 25 வருடமாக நான் பியூட்டி கார்டன் மற்றும் ரிசார்ட்ஸ் மற்றும் நரசாரெட்டிக்கோ வழக்கறிஞர் அறிவிப்பு எதையும் அனுப்பவில்லை. அவர்கள்

மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் என் தந்தை பெயரில் தான் இருக்கிறது என்று பிராதை நான் தாக்கல் செய்யும் போது நான் சரிபார்த்தேன். நான் அவ்விதம் சரி பார்க்கவில்லை என்றும் சரிபார்க்காமல் பிராதை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமனார் என் பெயரில் சொத்துக்கள் எதையும் வாங்கி கொடுக்கவில்லை. 13.11.1997 அன்று 1ம் பிரதிவாதி எனக்கு ரூபாய் 2,25,000/- எங்களுக்குள் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுத்தார் என்றும் அதற்காக அவர் அதே தேதியில் நரசா ரெட்டி என்பவரிடமிருந்து ரூபாய், 2,30,000/- கடனாக வாங்கி அதிலிருந்து மேற்கூறிய பணத்தை எனக்கு கொடுத்தார் என்றும் அதற்காக 3.2 ஏக்கரை 1ம் பிரதிவாதி நரசாரெட்டிக்கு கிரையம் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டு அந்த பணம் நரசா ரெட்டியின் ஏஜென்ட் பாபு ராவ் என்பவரால் எடுத்துவரப்பட்டு நீதிமன்றத்தல் வைத்துஎன்னிடம் கொடுக்கப்பட்டது என்றும் அதன் பின்பு சமாதான ஒப்பந்தத்தில் நான் கையொப்பம் போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நீதிபதி நான் பணம் பெற்றுக்கொண்டதை விசாரித்து உறுதி செய்துகொண்டார் என்றும் என் முன்னிலையில் தான் சமரச மெமோவை பதிவு செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அப்போதே பூங்காவனம்மாள் எனக்கு எழுதி கொடுத்த அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதே தினம் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த

அசல் ஆவணத்தையும் நான் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ரூபாய் 2,25,000 பெற்றுக்கொண்டதை அ.வ.எண். 497/1996ல் வழக்கில் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அது அ.வ.எண். 432/1997லும் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் 25 வருடம் கழித்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 497/1996 வழக்கை இவ்வழக்கின் பிராதின் பரிகார பாராவில் காட்டினால் நான் மாட்டிக்கொள்வேன் என்று அதை அடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் குரோம்பேட்டையில் உள்ள வீட்டை என் தந்தை தான் வாங்கி கொடுத்து வீட்டை கட்டிகொடுத்தார் என்றும் பல சொத்துக்களை எனக்கு என் தந்தை என் பங்கிற்கு கொடுத்துவிட்டார் என்றும், நானும் பல சொத்துக்களை விற்றுவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போதும் சில சொத்துக்களை விற்பதற்கு முயற்சித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பேராசை பட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் பாகப்பிரிவினைபரிகாரம் மற்றும் அ.வஎண்.432/1997 சம்பந்தமாக பரிகாரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பிராதில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யாது என்றும் பிராது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.